செய்தி வெளியீடு எண் : 2308 நாள் : 20.11.2023

**தமிழ் நாடு மின் ஆளுமை முகமை அலுவலகத்திற்கு கூடுதல் பணியிட வசதிக்காக சென்னை அண்ணா சாலை, பி.டி.லீ.செங்கல்வராய கட்டடத்தில் மூன்றாம் தளத்தினை, மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் இன்று (20.11.2023) துவக்கி வைத்தார்.**

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மற்றும் மின் ஆளுமை இயக்குநரகம் தற்போது சென்னை அண்ணாசாலையில் உள்ள பி.டி.லீ செங்கல்வராய டிரஸ்ட் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

தமிழ் நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் அரசாணை எண்.10, நாள் : 10.03.2023 இல் தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு புதிய திட்டங்கள் மற்றும் அலகுகளை அனுமதித்து 62 புதிய பணியிடங்களை உருவாக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே சென்னை, அண்ணா சாலை, பி.டி.லீ செங்கல்வராய அறக்கட்டளை கட்டடத்தின் 3வது தளம் வாடகைக்கு அமர்த்தப்பட்டு, தமிழ்நாடு மின்ஆளுமை முகமையின் பணியாளர்களுக்கு கூடுதல் அலுவலக இடம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக ரூ.2.29 கோடி செலவில் ஊழியர்களுக்கான பணியிடம் wi – fi, LAN மற்றும் Firewall போன்ற தொழில் நுட்ப வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பணி எல்காட் நிறுவனத்தின் தலைமைப் பொறியியல் ஆலோசகர் தலைமையிலான சிவில் இன்ஜினியரிங் குழுவின் மேற்பார்வையில் நடைபெற்றது.

இந்த 3வது தளம் 7010 சதுர அடி இட வசதியுடன் 80 பணிநிலையங்கள், 8 குழுத் தலைவர்களுக்கான அறைகள், 2 இணை இயக்குநர்களுக்கான அறைகள், 12 இருக்கை கூட்ட அரங்கம், 96 இருக்கைகள் கொண்ட உணவு அருந்தும் அறையை உள்ளடக்கியதாகும்

விஆர்எஃப்(VRF) ஏர் கண்டிஷனிங், ஸ்மோக் டிடெக்டர்(SMOKE DEECTOR), டச்–ஃப்ரீ (TOUCH FREE) ரெஸ்ட்ரூம், எலக்ட்ரிக்கல் அறை ஆகியவற்றுடன், கூடிய இந்த தளம் சிசிடிவி கண்காணிப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த தளத்தினை , மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் இன்று (20.11.2023) துவக்கி வைத்தார். இது தமிழ்நாடு முதலமைச்சரின் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருள் ஆதாரத்தை அடைய மற்றுமொரு மைல்கல் ஆகும்.

இந்த நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் முதன்மைச் செயலர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப, தமிழ்நாடு அரசின் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தலைமை தொழில்நுட்ப அலுவலர் திரு. ராபர்ட் ஜெரார்ட் ரவி, ITS, தமிழ் நாடு மின்ஆளுமை முகமையின் முதன்மை செயல் அலுவலர் திரு.பிரவீன் பி நாயர், இ.ஆ.ப, தமிழ் நாடு மின் ஆளுமை முகமையின் இணை முதன்மை செயல் அலுவலர் திருமதி.பெ. ரமண சரஸ்வதி, இ.ஆ.ப, மற்றும் தமிழ் நாடு மின்ஆளுமை முகமையின் ஆலோசகர் திரு P.W.C. டேவிதார், இ.ஆ.ப(ஓய்வு) உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in